DEPOSITION OF THE WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,

RAMANATHAPURAM

**C.C.No. 387/2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW4 | Caste | : | |
| Name | : | சீனிசேகர் | Age | : | 45 |
| F/N | : | தங்கமுத்து | Occupation | : | கடல்தொழில் |
| Village | : | சீனியப்பதர்ஹா | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 19th day of March 2025.

**19.03.2025**

**(எதிரி ஆஜராகவில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது).**

**முதல் விசாரணை**

நான் இராமநாதபுரம் மாவட்டம் சீனியப்பதர்ஹாவில் குடியிருந்து கொண்டு கடல் தொழில் செய்து வருகிறேன். கடந்த 2024ம் ஆண்டு 6வது மாதம் ஒரு நாள் காலை சுமார் 07.00 மணியளவில் நான் அரியமான் பீச்சில் இருந்த போது உச்சிப்புளி போலீசார் அங்கு வந்து என்னிடம் சாட்சி கையெழுத்து வாங்கினார்கள். இதை தவிர இந்த வழக்கைப்பற்றி எனக்கு எதுவும் தெரியாது. தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். பார்வைமகஜரில் உள்ள விபரங்கள் எதுவும் எனக்கு தெரியாது. **(பார்வைமகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக பாவிக்க கோரி அரசு தரப்பில் கேட்டுக் கொண்டதற்கிணங்க அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது).**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 09.06.2024-ம் தேதி காலை சுமார் 07.00 மணியளவில் நானும், ஆறுமுகம் என்பவரும் அரியமான் பீச் அருகே நின்றுகொண்டிருந்தோம் என்றால் சரியல்ல. அப்போது அங்கு வந்த உச்சிப்புளி காவல்நிலைய சார்பு ஆய்வாளர் எங்கள் இருவர் முன்னிலையிலும் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றால் சரியல்ல. அந்த பார்வைமகஜரில் நானும், ஆறுமுகம் என்பவரும் கையெழுத்து செய்தோம் என்று போலீசார் விசாரணையில் தெரிவித்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

அ.சா.1 எனது மனைவி என்றால் சரிதான். எந்த நிலை போலீசார் என்னை விசாரித்தார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. எந்த தேதியில் என்னை விசாரித்தார்கள் என்றால் தெரியாது. பார்வைமகஜரில் உச்சிப்புளி காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை**

PRABHAKARAN G

Digitally signed by PRABHAKARAN G
Date: 2025.03.19 17:08:36 +0530

நீதித்துறை நடுவர் எண்.2
இராமநாதபுரம்

DEPOSITION OF THE WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,

RAMANATHAPURAM

**C.C.No. 387/2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW5 | Caste | : | |
| Name | : | ஆறுமுகம் | Age | : | 56 |
| F/N | : | மாரிமுத்து | Occupation | : | பஜ்ஜி கடை |
| Village | : | அரியமான் | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 19th day of March 2025.

**19.03.2025**

**(எதிரி ஆஜராகவில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது).**

**முதல் விசாரணை**

நான் இராமநாதபுரம் மாவட்டம் அரியமானில் குடியிருந்து கொண்டு பஜ்ஜி கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறேன். கடந்த 2024ம் ஆண்டு 6வது மாதம் ஒரு நாள் காலை சுமார் 07.00 மணியளவில் நான் அரியமான் பீச்சில் இருந்த போது உச்சிப்புளி போலீசார் அங்கு வந்து என்னிடம் சாட்சி கையெழுத்து வாங்கினார்கள். இதை தவிர இந்த வழக்கைப்பற்றி எனக்கு எதுவும் தெரியாது. தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். பார்வைமகஜரில் உள்ள விபரங்கள் எதுவும் எனக்கு தெரியாது. **(பார்வைமகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக பாவிக்க கோரி அரசு தரப்பில் கேட்டுக் கொண்டதற்கிணங்க அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது).**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 09.06.2024-ம் தேதி காலை சுமார் 07.00 மணியளவில் நானும், சீனிசேகர் என்பவரும் அரியமான் பீச் அருகே நின்றுகொண்டிருந்தோம் என்றால் சரியல்ல. அப்போது அங்கு வந்த உச்சிப்புளி காவல்நிலைய சார்பு ஆய்வாளர் எங்கள் இருவர் முன்னிலையிலும் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றால் சரியல்ல. அந்த பார்வைமகஜரில் நானும், சீனிசேகர் என்பவரும் கையெழுத்து செய்தோம் என்று போலீசார் விசாரணையில் தெரிவித்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

அ.சா.2 எனது மனைவி என்றால் சரிதான். அ.சா.1 எனது கொழுந்தியா என்றால் சரிதான். எந்த நிலை போலீசார் என்னை விசாரித்தார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. எந்த தேதியில் என்னை விசாரித்தார்கள் என்றால் தெரியாது. பார்வைமகஜரில் உச்சிப்புளி காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல. அ.சா.1 எனது உறவினர் என்பதால் சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்து செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை – இல்லை</u>**

PRABHAKARAN G

Digitally signed by PRABHAKARAN G
Date: 2025.03.19 17:08:46 +0530

நீதித்துறை நடுவர் எண்.2
இராமநாதபுரம்